**திம்புலாகல பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 மே 29 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 16 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திம்புலாகல பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு சொந்தமான அரலகங்வில வாரச் சந்தையின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துகள் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | புத்தகங்களிலிருந்து கைவிடப்பட்டுள்ள காணிகளின் பெறுமதிகளை கணக்குகளில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | 2013 ஆம் ஆண்டின் போது நிர்மாணிக்கப்பட்ட அரலகங்வில் புதிய மீன் விற்பனை நிலையத்தின் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துகள் பெறுமதி இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | காணியின் உரித்து சபைக்கு இல்லாதிருந்ததுடன், காணியை ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | சபைக்கு சொந்தமான 60 விளையாட்டு மைதானங்களின் மற்றும் 56 இடுகாடுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு | பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட வேண்டும். | காணியை ஒப்படைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (iv) | மீளாய்வாண்டில் கணக்காய்வு கட்டணங்களுக்கான ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது திருத்துகின்றேன். |

**(ஆ) இணக்கம் செய்யப்படாத கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுகளின் பிரகாரம் நிலுவை நீர்க் கட்டணங்களின் மீதி மற்றும் நீர் செயற்திட்டங்களின் மூலம் தயாரிக்கப்பட்ட நிலுவை நீர்க் கட்டண பட்டோலைகளிடையே ரூபா 886,745 ஆன இணக்கமின்மைகள் காணப்பட்டன. | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். | தேடிப் பார்த்து திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (ii) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுகளுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஊழியர் கடன் பட்டோலை மற்றும் ஐந்தொகையில் அந்த பெறுமதிகளுக்கிடையே ரூபா 34,793 ஆன இணக்கமின்மைகள் நிலவின. | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வேறுபாட்டினை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவின கடன்பட்டோர் பட்டோலை மற்றும் ஐந்தொகையில் அந்த பெறுமதிகளுக்கிடையே ரூபா 590,000 ஆன | சரியான பெறுமதி கணக்கு வைக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது கணக்குகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

இணக்கமின்மைகள்
நிலவின.

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 416,622,155 பெறுமதியான 09 கணக்கு விடயங்களுக்குரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான மதிப்பாய்வுக்கு உட்படுத்த முடியாதிருந்தது. | நிதிக்கூற்றுக்களிலுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. | 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பொருள் மெய்மையாய்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது நிறைவடைந்தவுடன், சொத்துக்களின் மதிப்பாய்வினை மேற்கொள்ள நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சமர்ப்பிக்கப்படாத பதிவேடுகளை பராமரிப்பதற்கு விடயத்திற்கு பொறுப்பான எழுதுவினைஞருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பெறுமதி<br>ரூபா | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் 23(அ) பிரிவு | பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்தினுள் செயற்படும் நிறுவனங்கள் இனங்காணப்பட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - | அதிகாரப் பிரதேசத்தினுள் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய நிறுவனங்கள் இனங்காணப்பட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட வேண்டும். | நிறுவனங்கள் இனங்காணப்பட்டு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **(ஆ) (** | **1988 பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) விதி** | | | | |
| (i) | விதி இலக்கம் 19 | 16 அடியிதழ்சேர் புத்தகங்களை மீளக் கையளிக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | - | உரிய ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | அந்த புத்தகங்களை கையளிக்குமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. |
| (ii) | விதி இலக்கம் 59-63 | சபையின் அதிகாரப் பிரதேசத்தினுள் மதிப்பாய்வென்றினை மேற்கொண்டு கைத்தொழில்கள் மற்றும் வணிகங்கள் தொடர்பான பட்டியல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - | வருடாந்த மதிப்பாய்வென்றினை மேற்கொண்டு பட்டியல் தயாரிக்கப்பட்டு அதற்கமைய கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (iii) | விதி இலக்கம் 203 | சபையின் ஆதனங்கள் தொடர்பான 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பாய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | | விதியின் பிரகாரம் மதிப்பாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. | 2018 ஆம் ஆண்டிற்கான மதிப்பாய்வு இன்றளவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |
| **(இ)** | 2007 திசெம்பர் 19 ஆந் திகதிய 1528/21 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட விதிகள் மற்றும் | மீளாய்வாண்டின் திசெம்பர் முதல் ஏப்ரல் வரையான மாதங்களில் தலைவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் எல்லையினை மிகைத்து 530 லீட்டர்கள் | 60,880 | அங்கீகரிக்கப்பட்ட எல்லையினுள் குறித்த செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், மேதிகமாக செலவிடப்பட்ட செலவினம் அறவிடப்பட வேண்டும். | பிரதேச சபை அலுவலகம் அதிகார எல்லையின் ஆரம்பத்தில அமைந்திருந்தமை, நீர் செயற்திட்டங்களின் கண்காணிப்பு, சபையின் பணிகளுக்காக கொழும்பிற்கு மற்றும் அனுராதபுரத்திற்கு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 2018 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 2086/15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் கட்டளை இலக்கம் 1.1 | பயன்படுத்தி ரூபா 60,880 செலவிடப்பட்டிருந்தது. | | | செல்ல நேர்கின்றமை ஆகியவற்றால் எல்லை மீறப்பட்டுள்ளது. |
| **(இ)** | உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை<br>---------------------------- | | | | |
| | 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய இலக்கம் NCP/LG/AC/04 /01/02 ஆம் இலக்க கடிதம். | மீளர்வாண்டின் சனவரி முதல் மார்ச் வரையான மாதங்களில் செயலாளருக்கு இணைப்ப செய்யப்பட்டிருந்த வாகனத்திற்காக அங்கீகரித்த எரிபொருள் எல்லையினை மிகைத்து எரிபொருள் 589 லீட்டர்கள் ஈடுபடுத்தி ரூபா 55,955 தொகை செலவிடப்பட்டிருந்தது. | 55,955 | கூடுதலாக செலுத்தியவற்றை அறவிடுவதற்கு அல்லது உரிய அங்கீகாரம் பெற்றக்கொள்ளப்பட வேண்டும். | பிரதேச சபை அலுவலகம் அதிகார எல்லையின் ஆரம்பத்தில அமைந்திருந்தமை, 04 நீர் செயற்திட்டங்களின் கண்காணிப்பு, கூட்டப் பணிகளுக்காக பங்குபற்றியமையால் எல்லை மீறப்பட்டுள்ளது. |

## 1.5 பெற வேண்டிய கணக்குகள்
---------------------------------------------

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| | -------------------------------------- | ----------------------- | ---------------------------- |
| (i) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள 02 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரையான காலப்பகுதியினுள் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 246,020 கூட்டுத்தொகையான | நிலுவைப் பணத்தை அறவிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சட்டரீதியாக சுவீகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சட்டரீதியாக சுவீகரிக்கப்பட்டதன் பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| நிலுவை கடை வாடகை பணம் மீளாய்வாண்டினுள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |

(ii) நிதிக்கூற்றுக்களில தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டுள்ள 2010 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 1,000,023 கூட்டுத்தொகையான வாரச்சந்தை குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைப் பணத்தை அறவிட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்காக சட்டத்தரணியின் அறிவுரை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

**1.6 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2015 ஆம் ஆண்டு முதல் 03 வருடங்களுக்க மேற்பட்ட காலமாக நிதிக்கூற்றுக்களில் முன்கொண்டுவரப்படும் ரூபா 1,954,698 தொகையான ஓவர்சீசர் களஞ்சிய இருப்பு மீதி அங்கீகாரமின்றி பேரேட்டுப் பதிவுகளினூடாக கணக்குகளிலிருந்து பதிவளிக்கப்பட்டிருந்தது. | விசாரணையொன்றை மேற்கொண்டு பொருத்தமான மீதிகள் மாத்திரம் பதிவளிக்கப்பட வேண்டும். | கணக்குகளை திருத்துவதற்கு 2019 ஆம் ஆண்டின் கணக்குகளின் மூலம் நடடவடிக்கை எடுக்கின்றேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,869,194 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,190,619 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 23,561,440 | 23,252,875 | 21,989794, | 9,709,245 | 1,707,200 | 22,580,755 | 21,187,709 | 8,446,164 |
| வாடகை | 7,874,700 | 3,989,520 | 3,360,008 | 1,384,067 | 9,509256, | 3,633,389 | 3,519,609 | 1,383,203 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 528,000 | 534,670 | 439,670 | 2,160,779 | 844,500 | 574,686 | 585,126 | 2,065,779 |
| ஏனைய வருமானம் | 14,988,550 | 16,806,291 | 6,161,362 | 24,305,423 | 9,187,400 | 13,192,685 | 6,178,676 | 13,660,545 |
| மொத்தம் | 46,952,690 | 44,583,356 | 31,950,834 | 37,559,514 | 21,248,356 | 39,981,515 | 31,471,120 | 25,555,691 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக சபையினால் ரூபா 46,952,690 ஆன வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போது சேகரிக்கப்பட்ட அவருமானம் ரூபா 31,950,834 ஆக இருந்ததுடன், அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 68 சதவீதமாக இருந்தது. | மதிப்பிடப்பட்ட இலக்குகளை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அபிவிருத்தி பணிகளுக்காக சபைக்கு சொந்தமான வாகனங்கள் ஈடுபடுத்தமையால் வாகனங்களை வாடகைக்கு வழங்குவதன் மூலம் சேகரிப்பதற்கு எதிர்பார்த்த வருமானத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. |

### 2.2.3 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாவாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக சபையின்ால் நடைமுறைப்படுத்தப்பட்ட 04 நீர் செயற்திட்டங்களின் நிலுவை | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு எழுத்துமூல அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. |

நீர்க் கட்டண வருமானங்கள் ரூபா 9,709,245 ஆக பெறுமதியினை கொண்டிருந்தது.

**2.2.4 குத்தகை வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| குத்தகை வழங்கும் போது உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டிருக்காமையால் சபைக்கு சொந்தமான 04 கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய கடை வாடகை ரூபா 123,950 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நிலுவையாக காணப்பட்டது. | குத்தகை வழங்கும் போது உடன்படிக்கைகளை கைச்சாத்திட வேண்டியதுடன், நிலுவைப் வருமானத்தினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவையாகவுள்ள பணத்தை செலுத்துமாறு அறிவித்து சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு செயலாற்றுகின்றேன். |

**2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| வட மத்திய மாகாண சபையின் பிரதம செயலாளரின் மற்றம் ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 23,549,923 ஆகும். 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 755,500 ஆக இருந்ததுடன், 2018 ஆம் ஆண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் ஆகியவை சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை நீதிமன்ற தண்டப்பணத்தை பெற்றுக்கொள்வதற்காக உரிய செயற்திட்டங்கள் தயாரித்து கோரப்பட்டுள்ளது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய வாரச்சந்தையை குத்தகைக்கு வழங்குதல், முற்சக்கர வண்டிகளின் தரிப்பிடங்களிலிருந்து கட்டணங்களை அறவிடல், விளம்ப பலகை கட்டணங்கள், களியாட்ட வரிகள், விற்பனை சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித்திட்ட கட்டணங்கள் அறவிடுவதற்காக 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உபவிதிகள் விதிக்கப்படவில்லை. | உரிய உப விதிகள் விதிக்கப்பட்டு அந்த பணிகளை ஒழுங்குபடுத்தி கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) செயல்நடவடிக்கை திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவன் பிரகாரம் உப விதிகளை விதித்து பணிகளை நிறைவேற்றிக்கொள்வதற்காக அரச நிதிச் சுற்றறிக்கையின் 1/2014 ஆம் இலக்கத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடத்தினுள் நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசித்துள்ள பணிகளுக்காக செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. |

**(இ) பணிப்பொறுப்புகளை நிறைவேற்றல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான 04 நீர் செயற்திட்டங்களின நீர் வடிகளில் காணப்பட்ட மணல் படிவுகள், சேறு அடைத்தல் ஆகியவற்றால் அகற்றப்பட்டிருந்தமையால் நுகர்வோருக்கு சுத்திகரிக்கப்படாத உரிய தரத்திற்கு அமையாத மாசடைந்த நீர் விநியோகிக்கப்பட்டிருந்தது. | சுத்தமான நீரினை விநியோகித்து சபையின் பணியை செம்மையாக நிறைவேற்ற வேண்டும். | இது வரையிலும், சிரிபுர மற்றும் நுவரகல் நீர் செயற்திட்டங்கள் இரண்டின் நீர் வடிகள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், திம்புலாகல மற்றும் வெஹரகல நீர் செயற்திட்டங்கள் இரண்டின் அபிவிருத்தி பணிகள் |

ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இலங்கை மஹாவலி அதிகாரசபையினால் 2012 ஆம் ஆண்டின் போது திம்புலாகல பிரதேச சபையின் குப்பைகளை அகற்றுவதங்காக 05 ஏக்கர்கள் பரப்பளவுடைய மீட்டப்பட்ட இடமொன்று அரகங்வில தம்பகஹ உல்பத பிரதேசத்தில் வழங்கப்பட்டு தற்போது 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், அந்த காணியின் உரித்து சட்டரீதியான சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

**3.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

| | | | |
|---|---|---|---|
| (அ) | ஐக்கிய நாடுகள் அமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பில் சபை அறிந்திருந்த போதிலும், அந்த நோக்கங்களிடையே சபைக்குரிய நோக்கங்கள் சரியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | சபையின் நோக்கங்கள் இனங்காணப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (ஆ) | பாதீட்டினை தயாரிக்கும் போது தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 சுற்றறிக்கையில் அஅறிமுகப்படுத்தப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | அறிவுரைகளுக்க மைய செயற்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (இ) | இலக்குகளை அண்மிக்கும் போது உரிய பணிகளை கண்காணிப்பதற்கான அடைவுகள் இனங்காணப்பட்டிராதமையால், குறிகாட்டிகளுக்காக தரவுகளை சேகரிக்கும் நடைமுறையொன்று காணப்படவில்லை. | தரவுகளை சேகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |
| (ஈ) | 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி | இனங்கண்டு நிதியேற்பாடுகளை வழங்க நடவடிக்கை | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | எடுக்கப்பட வேண்டும். | |
| (உ) | இலக்குகளை அண்மிப்பதற்காக நிறுவனத்தின் பதவியணியை பயிற்றுவிக்கும் நடைமுறையொன்று காணப்படாமையால், நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பில் தொடர்புகொள்ள வேண்டிய ஏனைய அரச நிறுவனங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | பயிற்சி நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தி எதிர்காலத்தில செயற்படுகின்றேன். |

### 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைகள் அதிகாரப்பிரதேசத்தினுள் காணப்படும் முற்சக்கர வண்டிகளின் தரப்பிடங்களிலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்கு பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவில் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் உப விதிகளை விதித்து சட்டரீதியாக்குவதற்கு சபை நடவடிக்கை எடுக்காமையால் சபையினால் தற்போது இனங்காணப்பட்டுள்ள 06 முற்சக்கர வண்டிகளின் தரப்பிடங்களிலிருந்து கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | உப விதிகளை விதித்து கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். | கட்டணங்களை அறவிடுவதற்கு நிர்வாகத்திற்கு அறிவிக்கின்றேன். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 152(1) பிரிவின் பிரகாரம் திம்புலாகல பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள தொலைபேசி கோபுரங்கள் 07 இற்காக மீளாய்வாண்டிற்காக ரூபா 24,000 ஆன வணிக/வியாபார வரியினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |
| (இ) | பிரதேச சபையின் அதிகாரப்பிரதேசத்தில் காணப்படும் அனைத்து விளம்பர பலகைகளும் பதிவேட்டிற்குட்படுத்தப்பட்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விளம்பர பலகைகளும் பதிவேட்டிற்குட்படுத்தப்பட்டு கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபையின் இரண்டாம் நிலையிலுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 05, தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியொன்று, நூலகர் பதவியொன்று, வருமானப் பரிசோதகர் பதவியொன்று, முன்பள்ளி ஆசிரியர் பதவிகள் 02, தளப் பரிசோதகர் பதவியொன்று எனும் படியாக 11 பதவிகளின் வெற்றிடம் நிலவியது. | வெற்றிடத்திற்காக தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெற்றிடங்களை நிரப்பித்தருமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | ஆரம்ப நிலைக்குரிய பார ஊர்தி இயக்குநர் பதவியொன்று, மின் தொழில்நுட்பவியலாளர் பதவியொன்று, குழாய் பொருத்துநர் பதவியொன்று, சுகாதார தொழிலாளர் பதவியொன்று எனுமாறு 04 பதவிகளின் வெற்றிடங்கள் மற்றும் அலுவலக உதவியாளர் பதவியொன்று, நூலக ஊழியர் பதவியொன்னு, 05 கள ஊழியர் பதவிகள் மற்றும் குழாய் தொழில்நுட்பவியலாளர் பதவியுமாக 08 பதவிகளின் மிகையொன்று காணப்பட்டது. | வெற்றிடத்திற்காக தகைமைவாய்ந்த உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | அறவிடப்படாது காணப்படும் ரூபா 331,741 ஆன ஊழியர் கடன் மீதியொன்று கடனாளியிடம் அல்லது பிணையாளரிடம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடனாளியிடம் அல்லது பிணையாளரிடம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவைக் கடன் மீதி தொடர்பில் தேடிப் பார்த்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

### 3.5 தொழிற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 நவம்பர் 08 ஆந் திகதியளவில் வெஹரகல நீர் செயற்திட்டத்தின் 72 நீர் மானிகள், சிறிபுர நீர் செயற்திட்டத்தின் 520 நீர் மானிகள், நுவரகல நீர் செயற்திட்டத்தின் 405 நீர் மானிகள், எனுமாறு 997 நீர் மானிகள் செயலற்றுக் காணப்பட்டன. | செயலற்ற நீர் மானிகளை அகற்றி துரிதமாக நீர் மானிகள் பொருத்தப்பட வேண்டும். | நீர் மானிகள் கொள்வனவு செய்யப்பட்டு பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 12 கடைகளிலிருந்து தற்காலிக மதிப்பீடொன்றின் அடிப்படையில் மற்றும் 02 கடைகளுக்காக குழுத் தீர்மானத்தின் அடிப்படையில் மற்றும் 05 கடைகளிலிருந்து 1992 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | ஆகக் குறைந்தது 05 வருடங்களுக்கு ஒரு தடைவ மதிப்பீடு செய்தல் இடம்பெற வேண்டும். | மதிப்பீடு செய்வதற்காக அனைத்து தகவல்களும் மதிப்பீட்டு திணைக்களத்திற்கு 2018 ஏப்ரல் மாதம் 05 ஆந் திகதிய கடிதத்தின மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

(அ) விளைவற்ற/குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான ரூபா 2,218,961 பெறுமதியான 7 கட்டிடங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விளைவற்று காணப்பட்டது. | பன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | ஒரு கட்டிடமொன்று சிதவடைந்த நிலையில் காணப்படுவதுடன், ஏனைய கட்டிடங்கள் தொடர்பில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கின்றேன். |

**(ஆ) சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| குத்தகையாளரால் கேள்வி நிபந்தனையை மீறி 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக நடாத்திச் செல்லப்படும் அரலகங்வில மிதிகிரிய மீன் கடையை மீள பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரித்தினை சபைக்கு சொந்தமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. | சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு காணியினை ஒப்படைக்குமாறு மஹாவலி அதிகாரசபைக்கு கடிதங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. |

**3.7 வெளிப்படையான மோசடிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் மக்களின் பாவனைக்காக 2014 திசெம்பர் 16 ஆந் | மீளப் பெற்றுக்கொள்வதற்காக சட்ட | அமைச்சரிகளுக்கு அறிவிக்கப்பட்ட போதிலும், |

| | | |
|---|---|---|
| திகதி சபைக்கு வழங்கப்பட்ட 360 கல்வனைசு கொடிக் கம்பங்கள் முன்னாள் தலைவர் மற்றும் 05 அமைச்சர்களுக்க விநியோக்கிகப்பட்டு 04 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், அவை மீள சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கையளித்திருக்கவில்லை. இது வரையிலும் இலஞ்சம் மோசடிகள் தொடர்பான சாத்துதல்களை விசாரிக்கும் ஆணைக்குழுவினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) 2015 பெப்ரவரி 20 ஆந் திகதி ரூபா 1,249,880 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த டெல் வகையிலான 10 மடி கணனிகள் மற்றும் ipad 02 முன்னாள் பிரதேச சபை அமைச்சர்கள் 12 பேருக்கு வழங்கப்பட்டு 3 ½ மேற்பட்ட காலம் கடந்துள்ள போதிலும், அவை மீள சபைக்கு பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையின் சொத்துக்களை மீள பெற்றுக்கொள்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மடி கணனிகளை ஒப்படைக்குமாறு நினைவுறுத்தற் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்த இயந்திரங்களை மீள கையளிப்பதற்கு அமைச்சர்களால் நிராகரிக்கப்பட்டிருந்தது. |

### 3.8 பெறுகைகள்

**பெறுகைகள் திட்டம்.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் பெறுகை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதங்காக பெறுகைகள் திட்டமொன்று தாயரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தாயரிக்கப்பட வேண்டும். | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் போதியளவான உள்ளக கணக்காய்வு பரிசோதனையொன்று | அனைத்து பணிகளையும் உள்ளடக்கும் வகையில் உள்ளக கணக்காய்வினை | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ள கவனம் செலுத்தப்பட வேண்டும். | |

**4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டினுள் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு ஒன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 02 மாதங்களுக்க ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடாத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை நடாத்த நடவடிக்கை எடுக்கின்றேன். |